# ஜெர்மனி கூட்டாட்சி குடியரசு அதிபரின் இந்தியாவிற்கான வருகை

**அக்டோபர் 01, 2015**

இந்தியா மற்றும் ஜெர்மனி இடையே 3 வது அக-அரசியல் ஆலோசனை கூட்டத்திற்காக (IGC) அக்டோபர் 4-6,2015 இல்,பெடரல் ஜெர்மனி குடியரசு அதிபர் அவரது மேதகு டாக்டர் அங்கேலா மேர்க்கெல் இந்தியாவிற்கு வருகை தர உள்ளார். அவர் பல அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட ஒரு பெரிய பிரதிநிதிகள் குழுவுடன் சேர்ந்து வார உள்ளார்.ஒரு உயர் வர்த்தக பிரதிநிதிகள் குழுவும் அதிபருடன் வர உள்ளது.

இந்த அக-அரசியல் ஆலோசனை கூட்டம் (IGC) இரண்டு அரசாங்கங்களின் அமைச்சரவை பங்களிப்புடன்,இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு நலன்களுக்கான முன்னுரிமை பகுதிகளில்,முழு அளவில் பரவலாக இருதரப்பு கூட்டினை முன்னெடுக்க உதவும் ஒரு தனிப்பட்ட உச்சி மாநாடு நிலை உரையாடல் ஆகும்.இந்தியா பங்குதாரராக இருந்த ஹானோவர் மெஸ்சேயில் பங்கேற்க ஏப்ரல் 2015 இல் ஜெர்மனிக்கு பிரதமர் மோடி அவர்களின் வெற்றிகரமான பயணத்தை மூன்றாவது அக-அரசியல் ஆலோசனை கூட்டம் (IGC) கட்டமைக்க முற்படும்.

அதிபர் மேர்க்கெல் 4 அக்டோபர் அன்று புது தில்லி வந்தடைய உள்ளார். அக்டோபர் 5 அன்று, ராஷ்டிரபதி பவனில் அவருக்கு ஒரு முறைசார்ந்த வரவேற்பு கொடுக்கபட உள்ளது,தொடர்ந்து ராஜ்காட் விஜயம் மற்றும் இரு தலைவர்களும் இடையே ஆன உத்தியோகபூர்வ கூட்டங்கள் மற்றும் இரண்டு தூதுக்குழுக்கள் இடையே அக-அரசியல் ஆலோசனை கூட்டம். அதிபர் மாண்புமிகு ஜனாதிபதியையும் சந்திக்கிறார். வெளிவிவகார அமைச்சர் திருமதி. சுஷ்மா சுவராஜ்

ஜேர்மனிய வெளியுறவு மந்திரி டாக்டர் பிராங்க் வோல்டர் ஸ்ரெய்ன்மெர் சந்திக்க உள்ளார்,மேலும் சான்ஸ்லரையும் சந்திப்பார்.

நரேந்திர மோடி மற்றும் சான்ஸ்லர் மேர்க்கெல் ஆழ்ந்த இருதரப்பு ஈடுபாடுடைய பாதுகாப்பு, படை, கல்வி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், உயர் தொழில்நுட்பம் உற்பத்தி, திறன் மேம்பாடு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், ரயில்வே, நீர் மற்றும் கழிவு மேலாண்மை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் விவசாயம்,ஆகிய பரஸ்பர நல சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஒரு பரவலான பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

நாஸ்காம் நடத்த உள்ள கைத்தொழில் 4.0 தொடர்பான ஒரு வணிக நிகழ்ச்சியில் பங்கேற்க மற்றும் ஜெர்மன் நிறுவனம்,M / s போஷ் இடத்தில் கண்டுபிடிப்பு மற்றும் தொழில் மேம்பாடு மையங்களை காணவும் அதிபர் மற்றும் பிரதமர் 6 அக்டோபர் அன்று பெங்களூருக்கு செல்ல உள்ளனர்.

இந்தியா மற்றும் ஜெர்மனி 2001ல் இருந்து மூலோபாய பங்காளிகளாக உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜெர்மனி இந்தியாவின் மிகப் பெரிய வணிகப் பங்காளியாகவும், இந்தியாவிலேயே ஏழாவது பெரிய வெளிநாட்டு முதலீட்டாளராகவும் உள்ளது. உற்பத்தி,மேம்பாடு, உயர் தொழில்நுட்பம், சுத்தமான சக்தி, நீர் மற்றும் கழிவு மேலாண்மை ஆகிய ஜேர்மனியின் ஒப்புக்கொள்ளபட்டுள்ள திறமைகள், மேம்பட்ட கூட்டுக்களில் ஒரு வலுவான அடித்தளத்தை வழங்குவதற்கு உதவும். இந்த விஜயம் இந்தியா மற்றும் ஜெர்மனி இடையே வலுவான, மூலோபாய, அரசியல் கூட்டினை ஒருங்கிணைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.